மாகாணக்கல்வித் திணைக்களம்
வட மாகாணம்

மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2017

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

தரம் - 11

நேரம் :- 1.00 மணி

சுட்டெண் :.........................

புள்ளி :-

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கம் இடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

- **பின்வரும் சம்பவத்தை** அவதானித்து 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு **விடை தருக.**

கிளிநொச்சியில் வசிக்கும் சண்முகி என்பவர் ஓர் பழச் செய்கை உற்பத்தியில் ஈடுபட்டு உடன் பழப்பானங்களைத் தயாரித்து அருகில் உள்ள புதிய பேரூந்து நிலையத்துக்கு அண்மையில் வைத்து விற்பனை செய்து வருகின்றார். நாட்டில் நிலவுகின்ற கடும் வரட்சி அவரது விற்பனையை அதிகரிக்கவும் அதிக இலாபத்தினை ஈட்டுவதற்கும் காரணமாக அமைகிறது. இதனால் தனது வணிகத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் இதனை ஓர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றார். மேலும் இவரது வணிகத்தினை மேம்படுத்துவதற்குக் குத்தகைக் கம்பனி குறைந்த வட்டி வீதத்தில் இயந்திர சாதனங்களை வழங்க முன்வந்துள்ளது.

1. இச் சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள தேவை மற்றும் அதற்கான விருப்பம் முறையே கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
   1) பழப்பானம் - உணவு
   2) உணவு - சுகாதாரம்
   3) உணவு - பழப்பானம்
   4) உணவு - பேரூந்து பயணிகள்

2. மேலுள்ள சம்பவத்தில் ‘சண்முகி’ வணிகத்திற்கான வாய்ப்பு
   1) பழத்தோட்டம் சொந்தமாக வைத்திருத்தல்.
   2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்ற எதிர்பார்த்தல்
   3) அருகில் புதிய பேரூந்து நிலையம் அமைந்திருத்தல்.
   4) பழப்பானம் தயாரிக்கத் தெரிந்திருத்தல்.

3. இச் சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘குறைந்த வட்டி வீதம்’ என்ற சூழல் காரணி அடங்கியுள்ள வணிகச் சூழல்
   1) பொருளாதாரச் சூழல்
   2) சட்டச் சூழல்
   3) தொழிநுட்பச் சூழல்
   4) பூகோளமயச் சூழல்

4. சண்முகி வணிகம் ஓர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்வதுடன் தொடர்புடைய சட்டம்
   1) 1954ம் ஆண்டு 14ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர் சட்டம்
   2) 1918ம் ஆண்டு 06 ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டம்
   3) 2007ம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
   4) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
5. இச் சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட சண்முகி வணிகம் தொடர்பில் சரியான கூற்று
   1) இது பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு வணிகமாகும்.
   2) இது சேவைகளை வழங்கும் ஒரு வணிகமாகும்.
   3) இது ஒரு பொதுத்துறை வணிகமாகும்.
   4) இது இலாப நோக்கற்ற வணிகமாகும்.
6. வணிகம் ஒன்றின் ①............. வணிக நோக்கங்களை நிறைவேற்ற அவசியமான முகாமைத் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துபவராகவும், அதே வேளை ②.......... தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்பவர்களாகக் காணப்படுவர். மேலே தரப்பட்ட கூற்றில் ① மற்றும் ② ஆகிய இடைவெளிகளில் இடம் பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1) போட்டியாளர்கள், ஊழியர்கள்
   2) உடைமையாளர், வாடிக்கையாளர்
   3) வாடிக்கையாளர், முகாமையாளர்
   4) முகாமையாளர், வாடிக்கையாளர்
7. பின்வருவன வணிகச் சூழல் ஒன்றில் இடம் பெற்ற சில நிகழ்வுகள் ஆகும்.

   A :- தரமான வெளிநாட்டு மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

   B :- வினைத்திறன் கொண்ட இயந்திரங்களைப் பெற்றக் கொள்ள முடிதல்.

   C :- நுகர்வுப் பொருட்களுக்கான விலை மட்டங்கள் அதிகரித்தல்.

   மேலே தரப்பட்ட நிகழ்வுகளிலிருந்து பூகோளமயச் சூழல் சார்ந்த காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

   1) A யும் C யும் 2) B யும் C யும் 3) A யும் B யும் 4) A, B, C எல்லாம்
8. பின்வருவன வங்கிகளால் வழங்கப்படும் சில சேவைகள் ஆகும். இவற்றுள் நடைமுறைக் கணக்கினைப் பேணும் வாடிக்கையாளருக்கு மட்டும் வழங்கப்படும் சேவை.
   1) நிலையான கட்டளைகளைச் செயற்படுத்தல்.
   2) வங்கி மேலதிகப் பற்று வசதியை வழங்குதல்.
   3) நிலையான வைப்புக்களைப் பேணுதல்.
   4) இலத்திரனியல் காசு தொடர்பிலான சேவைகளை வழங்குதல்.
9. ஓவியா என்பவர் கைத்தொலைபேசி வியாபாரம் ஒன்றினை செய்கின்றார். இவர் கைத்தொலைபேசிகளைக் கொள்வனவு செய்தமைக்காக சினேகன் என்பவருக்கு ரூ 200 000 பெறுமதியான காசோலையை வழங்கினார். ஓவியா இக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு
   1) தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு கணக்கினைக் கொண்டிருக்க வேண்டும்.
   2) தேசிய சேமிப்பு வங்கியில் நடைமுறைக் கணக்கினைக் கொண்டிருக்க வேண்டும்.
   3) மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கினைக் கொண்டிருக்க வேண்டும்.
   4) மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கினைக் கொண்டிருக்க வேண்டும்.

10. அரவிந்தன் தனது வியாபார நிறுவனத்துக்காக செலிங்கோ காப்புறுதி கம்பனியில் தீக் காப்புறுதிப் பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டார். காலப் போக்கில் சமையல் எரிவாயு முகவராக எரிவாயு சிலிண்டர்களையும் வாணிபத்தில் விநியோகிக்கத் தொடங்கினார். இது தொடர்பில் காப்புறுதிக் கம்பனிக்குத் தெரிவிக்கப்படவில்லை. வணிகத்தில் வாயு கசிவின் காரணமாக ஏற்பட்ட தீ அனர்த்தத்திற்காக நட்ட ஈட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அது காப்புறுதிக் கம்பனியால் மறுக்கப்பட்டது. இவ்வாறு நட்ட ஈட்டுக் கோரிக்கை மறுக்கப்பட்டதற்குக் காரணமான காப்புறுதித் தத்துவம் எது?
   1) காப்புறுதி செய்யத்தகு நலன்
   2) உயர் நம்பிக்கை
   3) இழப்பீடு
   4) பதிலாள் வைப்பு
11. மிகவும் உயர்ந்த எரிபொருள் வினைத்திறனுடைய வாகனமென்ற வகையில் கலப்பு இன (Hybrid) மோட்டார் வாகனங்களுக்கு மிகவும் கூடுதலான கேள்வி தற்போது காணப்படுகின்றது. இக் கூற்றில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்துக் கூறுகள் எவை?
   1) பாதையும் ஊடகமும் ஆகும்.
   2) ஊடகமும் வலுவும் ஆகும்.
   3) வலுவும் தரிப்பிடமும் ஆகும்.
   4) பாதையும் தரிப்பிடமும் ஆகும்.
12. வணிகமொன்று புதிய உற்பத்திப் பொருள் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரம் ஒன்றை இணையத்தில் பிரசுரித்திருந்தது. இது ஒரு
   1) உள்வாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   2) உள்வாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   3) வெளிவாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   4) வெளிவாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
13. பின்வருவன வியாபாரமொன்றின் பண்புகள் ஆகும்.

   A- இறுதி நுகர்விற்காக விற்பனை செய்தல்.

   B- பல்வேறு வகைகளைக் கொண்ட பொருட்கள் காணப்படுதல்.

   C- மீள் விற்பனை நோக்கத்திற்காக விற்பனை இடம் பெறல்.

   D- பொதுவாக விலை குறைவாகக் காணப்படுதல்.

   இங்கு மொத்த வியாபாரத்தின் பண்புகளாகக் கருதப்படுபவை.
   1) C யும் D யும்
   2) A யும் C யும்
   3) A யும் B யும்
   4) B யும் C யும்
14. முகாமைத்துவக் கருமங்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் தொகுதியைத் தெரிவு செய்க.
   1) திட்டமிடல் / ஒழுங்கமைத்தல் / நெறிப்படுத்தல் / கட்டுப்படுத்தல்
   2) திட்டமிடல் / நெறிப்படுத்தல் / ஒழுங்கமைத்தல் / கட்டுப்படுத்தல்
   3) நெறிப்படுத்தல் / ஒழுங்கமைத்தல் / கட்டுப்படுத்தல் / திட்டமிடல்
   4) கட்டுப்படுத்தல் / திட்டமிடல் / ஒழுங்கமைத்தல் / நெறிப்படுத்தல்

15. விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்று, நான்கு வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றின் பிறந்த நாளன்று மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொள்வனவின் போதும் விளையாட்டுப் பொருளொன்றை இலவசமாக வழங்கும். சந்தைப்படுத்தலின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவை மாறி யாது?

1) உற்பத்திப் பொருள்	3) விலை
2) இடம்	4) மேம்படுத்தல்

16. சரவணன் என்பவர் கம்பனியொன்றில் ஒவ்வொன்றும் ரூ 60 வீதம் வாங்கிய 1000 சாதாரண பங்குகளை ஒரு மாதத்தின் பின்னர் ஒவ்வொன்றையும் ரூ 90 வீதம் விற்பனை செய்தார். இக் கொடுக்கல் வாங்கல் மூலம் அவர் பெற்றுக் கொண்ட திரும்பல்.

1) வட்டி வருமானம் ரூ 30 000 ஆகும்.
2) பங்கிலாபம் ரூ 30 000 ஆகும்.
3) மூலதன ஆதாயம் ரூ 30 000 ஆகும்.
4) மூலதன ஆதாயம் ரூ 90 000 ஆகும்.

17. கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஒரு கொடுக்கல் வாங்கலின் தாக்கம் கீழே தரப்படுகின்றது.

சொத்துக்கள்	=	உடைமையாளர் உரிமை	+	பொறுப்புக்கள்
+ 30 000	=	-		**+ 30 000**

மேலுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்

1) ரூ 30000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை.
2) கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு ரூ 30 000 ஆகும்.
3) காசாக மீளச் செலுத்திய வங்கிக்கடன் ரூ 30 000 ஆகும்.
4) உரிமையாளரால் மூலதனமாகக் கொண்டு வரப்பட்ட காசு ரூ 30 000 ஆகும்.

18. காசாகச் செலுத்தப்பட்ட வணிகமொன்றின் வங்கிக்கடன் தவணைப்பணம் (ரூ 2000 வட்டி உள்ளடங்களாக) ரூபா 12 000 தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டில் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினைச் சரியான முறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.

	சொத்துக்கள்	=	உடமையாளர் உரிமை	+	பொறுப்புக்கள்
1)	- 12 000		- 2000		- 10 000
2)	- 12 000		-		- 12 000
3)	- 10 000		-		+ 10 000
4)	- 12 000		- 10 000		- 2000

19. கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்கான ஓர் இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

சென்மதியாளர் கணக்கு வரவு ரூ 15000
காசுக் கணக்கு செலவு ரூ 15000

இங்கு நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்

1) ரூ 15000 பெறுமதியான பண்டங்கள் காசுக்கு வாங்கப்பட்டது.
2) ரூ 15000 பெறுமதியான பொறுப்பு தீர்க்கப்பட்டது.
3) ரூ 15000 பெறுமதியான காசு சென்மதியாளரிடமிருந்து பெறப்பட்டது.
4) ரூ 15000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு

20. பின்வருவன வணிகமொன்றின் பேரேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கணக்காகும்.

.... கணக்கு

திகதி	விபரம்	பே.ப	தொகை	திகதி	விபரம்	பே.ப	தொகை
01.01	மீதி		15 000	15.01	காசு		38 000
10.01	விற்பனைகள்		35 000	15.01	கொடுத்த கழிவு		2 000
				31.01	மீ.செ		10 000
			50 000				50 000
01.02	மீ.வ		10 000				

இக் கணக்கின் பெயரையம், இக் கணக்கு உரித்தாகும் கணக்கு வகையையும் ஒழுங்கு முறையில் கொண்டமைந்த விடையைத் தெரிவு செய்க.

1) கடன் கொடுநர் கணக்கு, பொறுப்புக் கணக்கு
2) காசுக் கணக்கு, சொத்துக் கணக்கு
3) கடன்படுநர் கணக்கு, பொறுப்புக் கணக்கு
4) கடன்படுநர் கணக்கு, சொத்துக் கணக்கு

21. 'செலவு அதிகரித்தல், வரவு குறைதல்' எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு

1) மூலதனக் கணக்கு
2) காசுக் கணக்கு
3) கொடுத்த கழிவுக் கணக்கு
4) கொள்வனவுக் கணக்கு

22. அக்பர் தனது வணிகத்திற்கு ரூ 50 000 பெறுமதியான பொருட்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்தார். இரண்டு வாரங்களின் பின்னர் ரூ 35 000 ஐ காசோலை மூலம் கொடுப்பனவு செய்தார். இச் சம்பவத்தில் கடன் கொள்வனவுக்குரிய மூல ஆவணத்தையும், காசோலை மூலமான கொடுப்பனவுக்குரிய மூல ஏட்டினையும் குறிப்பிடுக.

1) காசோலை அடியிதழ், வங்கிக் கணக்கு
2) கொள்வனவுப் பட்டியல், கொள்வனவு நாளேடு
3) கொள்வனவுப் பட்டியல், வங்கிக் கணக்கு
4) கொள்வனவுப் பட்டியல், காசுக் கணக்கு

23. திருத்திய வங்கிக் கணக்கில் பதியமுடியாத ஓர் உருப்படி

1) சமர்ப்பிக்கப்படாத காசோலை
2) நேரடி வைப்புக்கள்
3) வங்கி அறவீடுகள்
4) நிலையான கட்டளைக் கொடுப்பனவு

24. வணிகமொன்றில் நிகழ்ந்த ஒரு கொடுக்கல் வாங்கல் கீழே தரப்பட்டுள்ளது.

- பிரியங்கா என்ற கடன்படுநரிடம் இருந்து பெற வேண்டிய ரூ5000 இற்காக ரூ 4500 காசாகப் பெறப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கல் காரணமாக

1) இவ் வணிகத்தின் அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ 500 ஆல் அதிகரிக்கும்.
2) இவ் வணிகத்தின் கடன்படுநர் மீதி ரூ 4500 ஆல் குறைவடையும்.
3) இவ் வணிகத்தின் காசு மீதி ரூ 4500 ஆல் குறைவடையும்.
4) இவ் வணிகத்தின் வியாபாரக் கழிவு ரூ 500 ஆகும்.

25. அமுதா வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதி ரூ 3000 ஆகும். 31.03.2017 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த மீதி ரூ 150 ஆகும். அதே தினத்தில் சில்லறைக் காசேடானது மீள் நிரப்பப்பட்டது. சில்லறைக் காசேட்டு கட்டுநிதி மீள் நிரம்பல் தொடர்பான சரியான இரட்டைப்பதிவு.

1) சில்லறைக் காசேடு வரவு ரூ 3000
   காசுக் கணக்கு செலவு ரூ 3000
2) சில்லறைக் காசேடு வரவு ரூ 2850
   காசுக் கணக்கு செலவு ரூ 2850
3) காசுக் கணக்கு வரவு ரூ 3000
   சில்லறைக் காசேடு செலவு ரூ 3000
4) காசுக் கணக்கு வரவு ரூ 150
   சில்லறைக் காசேடு செலவு ரூ 150

26. பொதுநாட்குறிப்பேடு தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- பொதுநாட்குறிப்பேடு என்பது ஒரு முதன்மைப் பதிவு ஏடு ஆகும்.

B- பொது நாட்குறிப்பேட்டில் இடம் பெறுவது ஆரம்பப்பதிவுகள் மட்டுமே ஆகும்.

C- பொது நாட் குறிப்பேட்டில் மூல ஆவணமாக நாட்குறிப்புக் கைச்சாத்து பயன்படுத்தப்படுகிறது.

D- வழுக்களைத் திருத்துவதற்கான மூல ஏடாக இது பயன்படுத்தப்படும்.

மேலே தரப்பட்டவற்றில் இருந்து சரியான கூற்றுக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1) A,C
2) A,C,D
3) A,D
4) B,C,D

27. கடன்படுநரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்த காசோலை ஒன்று வங்கியால் மறுக்கப்பட்டது. இதனைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு

1) கடன்படுநர் கணக்கு வரவு
   வங்கிக் கணக்கு செலவு
2) வங்கிக் கணக்கு வரவு
   கடன்படுநர் கணக்கு செலவு
3) காசுக் கணக்கு வரவு
   கடன்படுநர் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு
   மறுத்த காசோலைக் கணக்கு செலவு

28. வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல் ஒன்றும் அதனைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட இரட்டைப் பதிவும் கீழே தரப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல் : இயந்திர உபகரணம் கொள்வனவு காசுக்கு ரூ 60 000 ஆகும்.

இரட்டைப் பதிவு : இயந்திர திருத்தச் செலவுகள் கணக்கு வரவு ரூ 60 000
காசுக் கணக்கு செலவு ரூ 60 000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்வதில் நிகழ்ந்த கணக்கீட்டு வழு யாது?

1) இழைக்கப்பட்ட வழு
2) கோட்பாட்டு வழு
3) விடுபடல் வழு
4) ஈடுசெய்யும் வழு

- **பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 29ஆம் 30ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

  விண்மீன் விளையாட்டுக் கழகத்தில் 200 அங்கத்தவர்கள் காணப்படுவதுடன் அவர்களது மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 10 ஆகும். 2016ஆம் ஆண்டிற்காக 20 அங்கத்தவர்கள் எந்தவொரு அங்கத்துவப் பணத்தையும் செலுத்தவில்லை.

29. அங்கத்துவப் பணம் தொடர்பில் வருமானச் செலவு கணக்கிலும் ஐந்தொகையிலும் உள்ளடக்கப்பட வேண்டிய தொகைகள் முறையே எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
    1) ரூபா 1800, ரூபா 200
    2) ரூபா 21600, ரூபா 2400
    3) ரூபா 2000, ரூபா 200
    4) ரூபா 24000, ரூபா 2400

30. இலாப நோக்குடைய நிறுவனங்களின் காசேட்டை ஒத்ததாக, இலாப நோக்கற்ற நிறுவனங்களால் தயாரிக்கப்படுவது
    1) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு
    2) வருமானச் செலவுக் கணக்கு
    3) இலாப நட்டக் கணக்கு
    4) வியாபாரக் கணக்கு

31. மேசை ஒன்றைத் தயாரிப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வருமாறு.

அரிமரம்	ரூபா 1000
ஆணிகள்	ரூபா 50
தச்சு வேலைக் கட்டணம்	ரூபா 250
மின்சாரம்	ரூபா 25

    இம் மேசைக்கான நேர்ப் பொருட்கிரயம் யாது?
    1) ரூபா 1000
    2) ரூபா 1300
    3) ரூபா 1050
    4) ரூபா 1325

32. முதன்மைக் கிரயம் கொண்டிருப்பது பின்வருவனவற்றுள் எது?
    1) நேர்ப்பொருள் , நேர் உழைப்பு , மேந்தலைக் கிரயம்
    2) நேர்ப் பொருள், நேர் உழைப்பு, நேர்ச் செலவுகள்
    3) நேர்ச் செலவுகள், நேர் உழைப்பு, நேரில் செலவுகள்
    4) நேர் உழைப்பு, மேந்தலைக் கிரயம், நேரில் செலவுகள்

33. பரணி வணிகமானது 01.01.2016 இல் ரூ 200 000 ஐ வருடாந்தம் 15% வட்டியிலான நிலையான வைப்பில் முதலீடு செய்தது. 2016ஆம் ஆண்டில் ரூ 20 000 காசாக முதலீட்டு வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டது. 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்படும் இவ் வணிகத்தின் இலாபநட்டக் கணக்கில் முதலீட்டு வருமானமாக இருக்கும் தொகை யாது?
    1) ரூ 10 000
    2) ரூ 30 000
    3) ரூ 20 000
    4) ரூ 220 000

34. ஒரு வணிகம் விலைக்கு வாங்கிய இயந்திரத்தின் பெறுமதி ரூபா 600 000 ஆகும். அதே வேளை அதன் வருடாந்தப் பெறுமானத் தேய்வு ரூபா 55 000 என மதிப்பிடப்பட்டுள்ளது. பயன்படு ஆயுட்காலப் பாவனையின் பின்னர் அதன் எஞ்சிய பகுதியின் பெறுமதி ரூபா 50 000 ஆகும். இயந்திரத்தின் பயன்படு பாவனைக் காலம் யாது?
    1) 5 வருடங்கள்
    2) 10 வருடங்கள்
    3) 8 வருடங்கள்
    4) 15 வருடங்கள்

The National e-Learning Portal for The General Education

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
- இரும்பொறை வணிகத்தின் 2016.12.31 ஆம் திகதிக்குத் தயார் செய்த பரீட்சை மீதி பின்வருமாறு.

விபரம்	வரவு (ரூ)	செலவு (ரூ)
இருப்பு (2016.01.01 திகதிக்கு)	40 000	
கொள்வனவுகள்	190 000	
விற்பனைகள்		335 000
தளபாடங்கள், உபகரணங்கள் கிரயத்துக்கு	60 000	
தளபாட உபகரணப் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் (2016.01.01 முதல்)		6 000
காணி கட்டிடங்கள்	200 000	
உட்சுமை கூலி	2 000	
கொடுத்த கழிவு	1 000	
கிடைக்கப் பெற்ற கழிவு		1 500
காப்புறுதிக் கட்டணம்	12 000	
விளம்பரச் செலவுகள்	36 000	
10% வங்கிக்கடன்		100 000
மின்சாரக் கட்டணம்	11 500	
வங்கிக் கடன் வட்டி	2 500	
கடன்கொடுத்தோர்		12 500
மூலதனம்		100 000
	555 000	555 000

- மேலதிக தகவல்கள்
  1. **2016.12.31ஆம் திகதி இருப்பு ரூபா 20 000**
  2. **நேர்கோட்டு முறையில் 5% தளபாடம், உபகரணங்களுக்கு பெறுமானத் தேய்விட வேண்டும்.**

35. இவ் வணிகத்தின் 31.12.2016 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைக் கிரயம்
    1) ரூ 200 000   2) ரூ 212 000   3) ரூ 214 000   4) ரூ 215 000

36. இவ் வணிகத்தின் இலாப நட்டக் கணக்கில் நிதிச் செலவாகக் காட்டப்படும் பெறுமானம்.
    1) ரூ 2 500   2) ரூ 10 000   3) ரூ 7 500   4) ரூ 20 000

37. 31.12.2016 இல் இலாப நட்டக் கணக்கில் காட்டப்படும் விற்பனை விநியோகச் செலவின் மொத்தத் தொகை
    1) ரூ 37 000   2) ரூ 38 000   3) ரூ 36 500   4) ரூ 39 500

38. இவ் வணிகத்தின் நடைமுறைப் பொறுப்புகளில் ஒன்று
    1) வங்கிக்கடன்   3) மூலதனம்
    2) தொலைபேசிக் கட்டணம்   4) கடன்கொடுத்தோர்

39. 31.12.2016ல் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி
    1) ரூ 200 000   2) ரூ 247 000   3) ரூ 250 000   4) ரூ 251 000

40. இவ் வணிகத்தின் 31.12.2016இல் முடிவுற்ற வருடத்திற்கான மொத்த இலாபம்
    1) ரூ 124 500   2) ரூ 118 000   3) ரூ 107 500   4) ரூ 123 000

(1 x 40 = 40 புள்ளிகள்)

e-thaksalawa The National e-learning Portal for The General Education

மாகாணக்கல்வித் திணைக்களம்
வட மாகாணம்

மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2017

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

தரம் - 11

நேரம் :- 1.00 மணி

சுட்டெண் :.........................

புள்ளி :-

பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II ல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. **பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு (1) முதல் (10) வரையிலான வினாக்களுக்கு விடை அளிக்குக.**

செந்தூரனின் தந்தை சிறந்த கட்டிட ஒப்பந்தக்காரர் ஆவார். தானும் அந்த வணிகத்துறையில் ஈடுபட வேண்டும் என்று நினைத்த செந்தூரன் 2017 ஜனவரி 01 ஆம் திகதி 'மயிலூரான் கட்டிடப் பொருள் வியாபார நிலையம்' என்ற வணிகத்தை ஆரம்பித்தார். செந்தூரன் தனது சேமிப்பிலிருந்து ரூபா 600 000 ஐ வணிகத்திற்கு முதலிட்டார். அன்றைய தினமே இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 200 000 ஐக் கடனாகப் பெற்று வணிகத்தில் முதலீடு செய்தார். இவ் வங்கிக் கடனைப் பெற்றுக் கொள்ளும் போது வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2017 ஜனவரி முதல் வாரத்தில் நடைபெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

- 2017 ஜனவரி 02 உழவு இயந்திரம் விலைக்கு வாங்கியது — ரூ 500 000
- 2017 ஜனவரி 03 கட்டிடப் பொருட்கள் காசுக்குக் கொள்வனவு — ரூ 50 000
- 2017 ஜனவரி 03 கட்டிடப் பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு — ரூ 30 000
- 2017 ஜனவரி 04 உடன் காசுக்கு விற்பனை — ரூ 50 000
- 2017 ஜனவரி 05 தொழிலாளர்களுக்கான கூலிக் கொடுப்பனவு — ரூ 10 000
- 2017 ஜனவரி 10 வியாபாரப் பாவனைக்காக உபகரணங்கள் கொள்வனவு — ரூ 25 000
- 2017 ஜனவரி 12 கடனுக்கு விற்பனை — ரூ 60 000
- 2017 ஜனவரி 13 உரிமையாளர் பற்று — ரூ 5 000
- 2017 ஜனவரி 14 ஊழியர் சம்பளம் செலுத்துதல் — ரூ 10 000

1. கட்டிடப் பொருட்களை உபயோகித்து மனிதன் நிறைவேற்றிக் கொள்கின்ற அடிப்படைத் தேவையைக் குறிப்பிடுக.
2. 'மயிலூரான் கட்டிடப் பொருள் வியாபார நிலையம்' தனியுரிமை வணிகம் ஆகும். நீர் ஏற்றுக் கொள்கிறீரா? காரணத்தைக் குறிப்பிடுக.
3. இவ் வணிகத்தை ஆரம்பிக்கும் போது செந்தூரனிடம் காணப்பட்ட இரண்டு பலங்களைக் குறிப்பிடுக.
4. இவ் வணிகம் பதிவு செய்வதனூடாகக் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. மூலதனமிடல் மற்றும் கடன் பெற்றுக் கொண்டதன் பின்னர் வணிகத்தில் காணப்படும் நிதி நிலைமையைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மூலம் காட்டுக.
6. இவ் வணிகத்தில் காணப்படும் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. இவ் வணிகத்தில் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் இரண்டினையும் அதனுடன் தொடர்புடைய முதன்மை ஏட்டினையும் குறிப்பிடுக.

8. செலவீனம் தவிர்ந்த இவ் வணிகத்தின் உரிமையாளர் உரிமையைக் குறைக்கக் காரணமான கொடுக்கல் வாங்கல் ஒன்றைக் குறிப்பிடுக.
9. இவ் வணிகத்தின் 2017 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2017 ஜனவரி 14 ஆந் திகதி வரை இடம் பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்களை காசேட்டில் பதிவு செய்க.
10. காசேட்டில் பதிவு செய்ய முடியாத மேற்குறித்த சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிடுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

பகுதி I
வணிகக்கல்வி
(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

02.

1. (அ) மனித தேவை என்றால் என்ன?
   (ஆ) மனித விருப்பங்களில் காணப்படும் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
   (அ) உடைமையாளர்கள், முகாமையாளர், ஊழியர்கள் மற்றும் போட்டியாளர் ஆகியோர் வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகளாவர்.
   (ஆ) வணிக ஊழியர்களிடம் காணப்படும் விசேட அறிவும் அனுபவமும் அவ் வணிகத்தின் வாய்ப்பொன்றாகும்.
   (இ) சில்லறை வியாபார வணிகம் ஒரு சேவை வணிகமாகும்.
   (ஈ) பண வீக்கம், வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் போன்ற மாறிகளை உள்ளடக்கியது பொருளாதாரச் சூழல் ஆகும்.

(02 புள்ளிகள்)

3. மாதவி என்பவர் தென்னந்தும்பிலிருந்து அழகிய கைவினைப் பொருட்களை உதவியாளர் ஒருவரின் உதவியுடன் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றார்.
   (அ) இவ் வணிகத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டு உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிடுக?
   (ஆ) நீர் மேலே (3) (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச் சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

4. கொக்கிளாய் கடற்கரையில் வசிக்கும் அமீர் என்பவர் அங்குள்ள கடற்றொழிலாளரிடமிருந்து கடலுணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து பல்வேறு உணவு வகைகளைத் தயாரித்து உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்து வருகிறார். இவர் இரண்டு உதவியாளர்களையும் ஒரு முகாமையாளரையும் தனது வணிகத்தில் வேலையில் அமர்த்தியுள்ளார்.
   (அ) இச் சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள அகச் சூழலிற்குரிய இரண்டு தரப்பினரைக் குறிப்பிடுக?
   (ஆ) அமீர் வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ள மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தரப்பினரைக் குறிப்பிட்டு அத் தரப்பினர் இவ் வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணம் ஒன்றினை எழுதுக? (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

03.

1. (அ) சில்லறை வியாபாரம் என்றால் என்ன?
   (ஆ) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இரண்டு பொருட்களையும் இறக்குமதி செய்யப்படும் இரண்டு பொருட்களையும் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
   (அ) நிலையான வைப்பிற்குக் கிடைக்கும் வட்டி வீதம் வைப்புக் காலத்திற்கமைய வேறுபடும்.
   (ஆ) சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு வங்கிக் கூற்றானது வங்கியால் அனுப்பப்படும்.
   (இ) புகையிரதக் கடவையில் காணப்படும் வீதிச் சமிக்ஞை ஒரு தொடர்பாடல் ஊடகமாகும்.

(ஈ) காசோலையின் முன்புறத்தில் இரண்டு சமாந்தரக் கோடுகளை இடுவதன் மூலம் வங்கியின் கருமபீடத்தில் இலகுவாகக் காசாக்கிக் கொள்ள முடியும்.

(02 புள்ளிகள்)

3. புதிய ஊழியர்கள் ஓய்வறை திறப்பு விழாவிற்காக சகல ஊழியர்களுக்கும் முகாமைப் பணிப்பாளரால் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

(அ) மேலுள்ள தொடர்பாடல் செயன்முறையினூடாக அனுப்புபவரையும், செய்தி, ஊடகம் ஆகியவற்றையும் பெறுபவரையும் முறையே எழுதுக?

(ஆ) மேற்குறித்த தொடர்பாடல் முறையை முகாமைப் பணிப்பாளர் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

4. கயல்விழி என்பவர் தினமும் பாடசாலைக்கு அரச பேரூந்தின் மூலம் வருகிறார்.

(அ) கயல்விழி பாடசாலைக்கு வருவதற்காகப் பயன்படுத்தும் போக்குவரத்து முறையுடன் தொடர்புடைய போக்குவரத்து மூலங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக?

(ஆ) இலங்கையில் அரச பேரூந்துப் போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

04.

1. (அ) திறைசேரி உண்டியல் என்றால் என்ன?

(ஆ) சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் மாறிகள் எவை?

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) வரையறுத்த பொதுக்கம்பனியொன்றில் ஈடுபடுத்திய மூலதனத்திற்காக பங்குதாரரிற்குக் கிடைக்கும் திரும்பல் பங்குலாபம் ஆகும்.

(ஆ) கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மட்டுமே பங்குப் பரிமாற்றத்தில் ஈடுபட முடியும்.

(இ) நிறுவனமொன்றின் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கும் அவற்றை அடைந்து கொள்வதற்கும் பொருத்தமான வழிமுறைகளைத் தீர்மானித்தல் தொடர்பான செயன்முறை திட்டமிடல் ஆகும்.

(ஈ) வணிகமொன்றினால் கவர்ச்சிகரமாகவும் இலாபகரமாகவும் திருப்திப்படுத்தக்கூடிய நுகர்வோர் துண்டமாக்கல் இலக்குச் சந்தை எனப்படும்.

(02 புள்ளிகள்)

3. பாடசாலையொன்று நற்பிரஜையுள்ள, தலைமைத்துவத்திறன் கொண்ட, சூழலை நேசிக்கக் கூடிய மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்குத் திட்டமிட்டு அதற்காகப் பகுதித் தலைவர், மாணவத் தலைவர், வகுப்புத் தலைவர் போன்ற பதவிகளைப் பிரித்து வழங்கிப் பணிகளை ஒப்படைத்துள்ளது. மேலும் இப் பணிகள் சிறப்புற நடைபெற அதிபராலும் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளாலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதிபர் பாடசாலை நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் பாடசாலைச் செயற்பாடுகள் பற்றி ஒவ்வொரு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதன் பின் ஆராய்ந்து வருகிறார்.

முகாமைத்துவச் செயன்முறையில் காணப்படும் நான்கு கருமங்களையும் குறிப்பிட்டு, அவ்வொவ்வொரு கருமங்களுக்கான உதாரணங்களை இச் சம்பவத்திலிருந்து தெரிவு செய்து கீழே தரப்பட்டுள்ளவாறான அட்டவணையில் குறிப்பிடுக.

முகாமைத்துவக் கருமம்	சம்பவத்தில் வழங்கப்பட்டுள்ள உதாரணங்கள்
1.	
2.	
3.	
4.	

(02 புள்ளிகள்)

4. விவசாய உள்ளீடுகளைத் தயாரிக்கும் நிறுவனமொன்று இயற்கைப் பசளையின் பயன்பாடு பற்றித் துண்டுபிரசுரமொன்றை வெளியிட்டது. அதில் பசளையானது தாவர வளர்ச்சிக்குத் தேவையான அதிக போசணைக்கூறுகளை உள்ளடக்கியதாகவும் 20.08.2017 அன்று யாழ் மாநகர சபை மண்டபத்தில் அவற்றை அறிமுகம் செய்ய உள்ளதாகவும் அன்றைய தினம் கொள்வனவு செய்யப்படும் சகல கொள்வனவுகளுக்கும் 30% வியாபாரக்கழிவு வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(அ) தமது சந்தைப்படுத்தல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கூறப்பட்ட

வணிகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகள் இரண்டினை எழுதுக.

(ஆ) நீர் மேலே (4) (அ) இல் எழுதிய ஒவ்வொரு சந்தைப்படுத்தல் கலவை மாறிக்கும் இச் சம்பவத்தில் உள்ளடக்கியுள்ள ஓர் உதாரணம் வீதம் தருக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

பகுதி II கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

05.

1. (அ) கணக்கீடு என்றால் என்ன?
   (ஆ) பொறுப்பொன்றில் காணக்கூடிய பண்புகள் இரண்டினைத் தருக?

(02 புள்ளிகள்)

2. குமரன் என்பவரது புடைவை வணிகத்தின் 2017 செப்டெம்பர் மாதத்திற்கான கடன் கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு

திகதி	பட்டியல் இலக்கம்	வழங்குநர் பெயர்	அளவு	ஏனைய தகவல்
12.09.2017	105	கோவலன்	ஒவ்வொன்றும் ரூ 300 வீதம் 100 சேட்டுகள்	வியாபாரக் கழிவு 10%
25.09.2017	106	கண்ணகி	ஒவ்வொன்றும் ரூ 40 வீதம் 200 கைக்குட்டைகள்	வியாபாரக் கழிவு 5%

வேண்டப்படுவது

2017 செப்டெம்பர் மாதத்துக்கான குமரன் வணிகத்தின் கொள்வனவு நாளேடு

(02 புள்ளிகள்)

3. **வணிகம் ஒன்றின் சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் ஏற்படுத்திய விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

	சொத்துக்கள்	=	உடைமையாளர் உரிமை	+ பொறுப்புக்கள்
(அ)	காசு + 50 000	=	மூலதனம் + 50 000	-
(ஆ)	காசு - 20 000 சரக்கிருப்பு + 20 000	=	-	-
(இ)	காசு - 5000	=	மின்கட்டணங்கள் - 5000	-
(ஈ)	சரக்குகள் + 10 000	=	-	கடன் கொடுத்தோர் + 10 000

வேண்டப்படுவது

மேலுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களைத் தொகைகளுடன் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4. **தேவி என்பவரின் வியாபாரத்தின் 2017 ஒக்டோபர் மாதத்தின் முதல் இரு வாரத்துக்கான சிறு செலவுக் காசுச் செலவுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு**

		(ரூபா)
• 01.10.2017	பிரதான காசாளரிடம் பெற்ற காசு	3 000
• 02.10.2017	பிரயாணச் செலவுகள்	200
• 03.10.2017	தபால், முத்திரைக் கட்டணங்கள்	150
• 04.10.2017	நன்கொடை	200
• 05.10.2017	தந்திக் கட்டணம்	50
• 05.10.2017	தட்டச்சு நாடா	160
• 06.10.2017	தட்டச்சுத் தாள்கள்	250
• 08.10.2017	வாடகை மோட்டார் கட்டணம்	150
• 09.10.2017	உள்வந்த வண்டில் கூலி	350
• 10.10.2017	பொழுது போக்குச் செலவுகள்	275
• 12.10.2017	நானாவிதச் செலவுகள்	150
• 14.10.2017	கட்டுநிதி மீள் நிரப்பப்பட்டது	

வேண்டப்படுவது

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களைப் பிரயாணம், அஞ்சல், நானாவிதம், பேரேட்டுக் கணக்கு என்ற பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சில்லறைக் காசேட்டினைத் தயாரிக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06.

1. (அ) நடைமுறைக் கணக்கிலிருந்து வங்கி அறவிடும் அறவீடுகள் இரண்டினைக் குறிப்பிடுக?
   (ஆ) உற்பத்திப் பொருள் ஒன்றின் விலையைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

2. தேன்மொழி என்பவர் பிரம்புக் கதிரைகளைத் தயாரித்து விற்பனை செய்ய உத்தேசிக்கின்றார். 2017 ஜனவரி மாதத்தில் 50 பிரம்புக் கதிரைகளைத் தயாரிக்க எதிர்பார்ப்பதுடன் அதற்குரிய பிரம்புகளுக்காக ரூ 40 000 உம் பிரம்பு வேலை செய்பவருக்கான மாதாந்தக் கூலியாக ரூ 10 000 உம் மின்சார செலவினங்களாக மாதாந்தம் ரூ 6000 உம் மாதாந்த வாடகையாக ரூ 4000 உம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டது.
   (அ) இவ் வணிகத்தில் எதிர்பார்க்கப்பட்ட நேர்க்கிரயம் மற்றும் நேரில் கிரயம் எவ்வளவு?
   (ஆ) கதிரை ஒன்றுக்கான எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திக்கிரயம் எவ்வளவு?

(02 புள்ளிகள்)

3. ஜனவரி மாதம் 31ஆம் திகதி சக்தி வணிகத்தின் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 45 000 ஆகும். எனினும் அத் திகதியில் வங்கிக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த மீதியானது வித்தியாசப்பட்டது. வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வருவன கண்டுபிடிக்கப்பட்டன.

- கடன்பட்டோர் வங்கியில் நேரடியாக வைப்புச் செய்த தொகை ரூ 8000 ஆகும்.
- வைப்புச் செய்யப்பட்டும் தீர்வையாகாத காசோலைகள் ரூ 5000 ஆகும்.
- வங்கிக் கட்டணம் ரூ 1000 வங்கியினால் அறவிடப்பட்டிருந்தது.
- வழங்கப்பட்டும் இதுவரை வங்கிக்கு முன் வைக்கப்படாத காசோலைகள் ரூ 6000 ஆகும்.

வேண்டப்படுவது

(அ) வங்கிக் கணக்கு மீதியைச் சீராக்குதல்

(ஆ) 2017.01.31ஆம் திகதியில் வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்து, அத் திகதியில் வங்கிக் கூற்றில் காணப்பட்ட மீதியைக் காட்டுதல்.

(04 புள்ளிகள்)

4. திரு.நிசாந்தன் என்பவர் வியாபார நிறுவனமொன்றை 01.01.2016 இல் தொடங்கியிருந்தார். 31.01.2016 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு (ரூ)	செலவு(ரூ)
கொள்வனவுகள்	55 000	
A - விற்பனை		70 000
தளபாடம், உபகரணங்கள்	42 000	
B - பற்றுக்கள்	7 000	
சம்பளமும் கூலியும்	8 000	
வங்கிக் கடன்		25 000
கட்டட வாடகை	6 000	
உள்வந்த வண்டில்கூலி	10 000	
C - வங்கிக்கடன் வட்டி	2 500	
D - காசு மீதி	63 400	
மூலதனம்		100 000
தொங்கற் கணக்கு	1 100	
	195 000	195 000

மேலே தரப்பட்டுள்ள பரீட்சை மீதியை தயாரித்த பின்னர் பின்வரும் கணக்கீட்டுத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- தளபாட, உபகரண திருத்தச் செலவுகள் ரூ 2000 தளபாடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- செலுத்தப்பட்ட மாதாந்த தொலைபேசிக் கட்டணம் ரூ 1100 காசேட்டில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

(அ) மேலுள்ள பரீட்சை மீதியில் A,B,C,D என்னும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒவ்வொன்றும் உரித்தாகும் பேரேட்டுக் கணக்கு வகை

(ஆ) மேலுள்ள தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

07.

1. (அ) சொத்துக்கள் என்றால் என்ன?
   (ஆ) பொதுநாட்குறிப்பேட்டில் இடம்பெறும் இரண்டு கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

2. அறிவொளி வாசகர் சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 220 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ 100 ஆகும். 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பின்வரும் தகவல்கள் சங்கத்தின் பொருளாளரால் வழங்கப்பட்டுள்ளது.

	ரூபா
• பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம்	20 000
• மின்சாரக் கட்டணங்கள்	3 600
• பழைய பத்திரிகைகள் விற்பனையில் பெற்ற காசு	2 000
• நீர்க் கட்டணங்கள்	1 200
• சம்பளங்கள்	10 000
• வாசிப்போர் மீது விதிக்கப்பட்ட தண்டப் பணம்	500
• பத்திரிகைகள் கொள்வனவு	6 000
• பெற்ற நன்கொடைகள்	10 000
• தளபாட உபகரணங்கள் கொள்வனவு	8 000

The National e-learning Portal for the General Education

வேண்டப்படுவது

அறிவொளி வாசகர் சங்கத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுகள் கணக்கு

(02 புள்ளிகள்)

3. 31.03.2017 இல் உள்ளவாறான சியாம் வணிகத்தின் பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு (ரூ)	செலவு (ரு)
மூலதனம்		400 000
01.04.2016 இல் சரக்கிருப்பு	8 000	
கொள்வனவும் விற்பனையும்	57 000	90 000
கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்	30 000	6 000
10% வங்கிக் கடன்		20 000
காணிகட்டிடங்கள் (கிரயத்தில்)	250 000	
இயந்திரங்கள் (கிரயத்தில்)	120 000	
வாடகை வருமானம்		5 000
தண்ணீர் வரி	10 000	
காப்புறுதி	7 000	
விற்பனை ஊழியர் சம்பளம்	9 000	
விளம்பரம்	4 000	
வங்கிக் கடன் வட்டி	1 000	
காசு மீதி	25 000	
	521 000	521 000

மேலதிக தகவல்கள்

- 31.03.2017 இல் சரக்கிருப்பின் பெறுமதி ரூ 18 000
- இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- கடன்பட்டோரில் ரூ 2000 இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழித்தல் வேண்டும்.

வேண்டப்படுவது

(அ) 31.03.2017இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக்கூற்று

(ஆ) 31.03.2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

(08 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)